R 2675 (page 236) [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# இழந்ததை திரும்பப்பெறுதலின் காலங்களுக்குரிய அழைப்பு இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ளதா?

## IS THE RESTITUTION CALL NOW OPEN?

R2676 : page 237

(2) கேள்வி - சுவிசேஷ யுக அழைப்பிற்கு முன்னதாக, இழந்ததைத் திரும்பப்பெறுதலின் காலங்களுக்குரிய அழைப்பு காணப்பட்டதா? ஏனோக்கு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் இஸ்ரயேலர்கள் அனைவரும் இழந்ததைத் திரும்பப்பெறுவதற்குத்தானே அழைக்கப்பட்டார்கள்? இது ஒருவேளை உண்மையாக இருக்குமானால், சுவிசேஷ யுக அழைப்பானது, இப்போதைக்கு ஒரு துணை அழைப்பாக மட்டும் காணப்படுகின்றதா? மேலும் இந்தச் சுவிசேஷ யுக அழைப்பு நிறைவடைகையில், இவ்வழைப்பினால் தற்காலிகமாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள ஆதியிலுள்ள அழைப்பு மீண்டும் அமலாக்கத்தில் வருமல்லவா?

பதில் - இல்லை! முற்பிதாக்களில் யாரும் இழந்ததைத் திரும்பப்பெறும்படியாக அழைக்கப்படவில்லை; இதுவுமல்லாமல் மீட்கும்பொருளானது கட்டித்தீர்க்கப்படாதது வரையில், பாவநிவாரணநாளின் பலிகள் அனைத்தும் செலுத்தி முடிப்பது வரையில், இவர்களோ அல்லது மற்றவர்களோ திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை அடைவது என்பது கூடாத காரியமாகும். மீட்கும்பொருள் இல்லாமலேயே இழந்ததைத் திரும்பப்பெறும் காரியம் சாத்தியமாகுமானால், அப்போது கிறிஸ்து மனுக்குலத்தின் உலகத்தைப் பொறுத்தமட்டில் விருதாவாகவே மரித்தார் என்பதாகிவிடும். இப்படியாக இல்லை; யாராவது திரும்பப்பெறுதலின் தயவுகளை அனுபவித்திருப்பார்கள் என்று கூறவேண்டுமானால், அது நாம் இப்பொழுது அனுபவிக்கிற விஷயமேயாகும் - அதாவது அத்தயவுகள் குறித்து நாம் பெற்றிருக்கும் அறிவேயாகும். இழந்ததைத் திரும்பப்பெறும் காரியம் தொடர்புடைய ஒரு சிறு அறிவு அல்லது குறிப்பு தகப்பனாகிய ஆதாமுக்கும், தாயாகிய ஏவாளுக்கும் கொடுக்கப்பட்டது. பிற்பாடு இது தொடர்புடைய ஒரு தெளிவான அறிக்கை ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டு, ஈசாக்கு மற்றும் யாக்கோபிற்கு உறுதிப்படுத்தப்பட்டது. ஒரு விஷயத்தைப் பற்றின வாக்குத்தத்தத்திற்கும் மற்றும் அவ்விஷயத்திற்கும் இடையில் பெரிய வித்தியாசம் உள்ளது. ஒருவேளை இழந்ததைத் திரும்பப்பெறுவதற்குரிய அழைப்பானது உண்மையாகவே கடந்துவந்திருக்குமானால், அதற்குச் சரியாய்ச் செவிகொடுக்கும் யார் ஒருவரும் பரிபூரணத்திற்கும், நித்திய ஜீவனுக்கும் சீர்ப்பொருத்தப்பட்டிருப்பார்கள். உண்மையில் இழந்ததைத் திரும்பப்பெறுவதற்குரிய வாய்ப்பு ஒன்று நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்டது - அதாவது அவர்கள் தங்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையினை மீறாமல், அதைக் காத்துக்கொண்டு நடப்பார்களானால், அவர்கள் பரிபூரண நிலைக்கும் மற்றும் ஜீவனுக்கும் திரும்பலாம் என்ற வாய்ப்புக் கொடுக்கப்பட்டது; ஆனால் நாம் பார்த்திருக்கின்றதுபோல, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வது என்பது கூடாத காரியமாகும்; ஆகையால் இவ்வுடன்படிக்கையின்கீழ் இழந்ததைத் திரும்பப்பெறுவதும் சாத்தியமற்ற காரியமாகவே காணப்பட்டது.

முற்பிதாக்களுடைய விசேஷம் என்னவென்றால், இவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குரிய எந்த அழைப்பும் கொடுக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்திருந்தபோதிலும், இவர்கள் தேவனுடைய கிருபையான நோக்கங்கள் பற்றின குறிப்புகளை மாத்திரமே அறிந்திருந்தபோதிலும், அவ்வாக்குத்தத்தங்கள் விஷயத்தில் மிக பெரிய விசுவாசத்தை வைத்தவர்களாய் இருந்தார்கள் - தேவனைப் பிரியப்படுத்துவதற்குரிய தங்களது பிரயாசங்களில் அதிகம் சகித்தவர்களானார்கள்; அவரது வாக்குத்தத்தங்களிலுள்ள தங்களது நம்பிக்கையின் காரணமாக அதிகம் சகித்தவர்களானார்கள். அப்போஸ்தலனாகிய பவுலின் பதிவை

R2677 : page 238

வைத்துப்பார்க்கையில், இவர்களில் சிலர் - ஒருவேளை இந்தச் சுவிசேஷ யுகத்தில் வாழ்ந்திருந்தார்களானால், இவர்களை ஜெயங்கொண்டவர்களாகவும், இராஜ்யத்தில் கிறிஸ்துவோடு உடன்சுதந்தரர்களாகவும் மாற்றும் அத்தகைய அனுபவங்களை, உண்மையாய்ச் சகித்துள்ளார்கள்; ஆனால் இவர்கள் இந்தப் பரம அழைப்பு அல்லது வேறு ஏதேனும் அழைப்பு கொடுக்கப்படுவதற்கு முன்னதாக ஜீவித்துள்ளபடியாலும், இவர்கள் வீரமாயும், உண்மையாயும் பாடு அனுபவித்து, சகித்திருக்கின்றபடியாலும், இவர்களுக்கு ஒரு மேன்மையான உயிர்த்தெழுதல், அதாவது உலகத்தைப்பார்க்கிலும் மிகவும் அநுகூலமான ஓர் உயிர்த்தெழுதல் வாக்களிக்கப்பட்டிருக்கின்றது; எனினும் அது சபைக்குக் காணப்படுவதுபோன்று மிகவும் வியத்தகு உயிர்த்தெழுதலாய் இருப்பதில்லை. அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று (அவர்களுக்குக் கொடுக்கப்படுவதைக்காட்டிலும்) தேவன் விசேஷித்த சிலவற்றை நமக்கு வாக்களித்துள்ளார். "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபிரெயர் 11:40)

அர்ப்பணிக்கப்பட்ட சுவிசேஷ யுக சபை தவிர்த்து, மீதமுள்ள மனுக்குலத்தாரைக்காட்டிலும் இவர்களுடைய உயிர்த்தெழுதல் மேன்மையான ஒன்றாகக் காணப்படும்; இவர்கள் உடனடியாகவே பரிபூரணத்திற்கு உயிர்த்தெழுவார்கள்; ஆனால் உலகத்தினுடைய உயிர்த்தெழுதலோ படிப்படியான ஒன்றாகவும், பயிற்சிகள் மற்றும் பரீட்சைகளோடு உள்ள ஒன்றாகவும் காணப்படும்; இது நமது கர்த்தரினால் "நியாயத்தீர்ப்பிற்கு ஏதுவான உயிர்த்தெழுதல்" என்று அழைக்கப்பட்டது; ஏதேனில் பறிமுதல் செய்யப்பட்டு, இழந்துபோகப்பட்ட அனைத்திற்கும், கீழ்ப்படிதல் உள்ளவர்களும், விருப்பமுள்ளவர்களும் ஆயிர வருஷ யுகம் முழுவதும் படிப்படியாக எழுந்துவருவார்கள்.

------------------------